முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 636**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

26.06.2021, சனிக்கிழமை

1. மகா சூட்சும ஞானச்சுடரே
மண்ணுலகை மீட்க வந்த அருட்குருவே
ஜெகமே உன் அருள் பெறவே
சித்திமிக்க ஞானலோகமாக மாறக்கூடும்
2. கூடுமென சுப்ரமணியர் யானும் இனிதே
கூறுவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசியாக
நாடுகின்ற மக்கள் படைகள் மூலம் ஞானவான்களெனும் புதுமை பலம் உண்டாகி
ஆகியே இந்த கலியுகம் மாற்றம் பெறும் அரங்கன் உன் தவதர்மத்தால் வெற்றி காணும்
3. காணவே அரங்கன் உன் நாமஜெபம் சொல்லி
கலியுகத்தில் பெருகுகின்ற தர்மவான்கள் மூலம்
ஞானலோகம் என்கின்ற சக்தி மாற்றங்கண்டு
ஞானிகள் மிகுதியாக உலகில் வெளிப்பட்டு
4. வெளிப்பட்டு ஞான ஆட்சிக் காலமதுவும்
விரைவில் உலகில் நடந்தேறும்
பலமான அரங்கன் உன் வழிபாடு பூஜையும்
பாருலகை சிறப்புமிக்க உலகமாக மாற்றி
5. மாற்றியே ஞானசித்தர் ஆட்சிக்காலம்
மகான் அரங்கன் உன் தயவாலே நடந்தேறும்
ஆற்றல்பட இந்த அற்புதத்தை
ஆறுமுகன்அரங்கன் உன் வழி யான் நிகழ்த்தி உலகை மகிழ்விப்பேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–